# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 318/2019 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | சிவகாமி |
| Husband Name / Father's Name | அழகுசுந்தரம் |
| Village | |
| Taluk | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 6th day of August 2019.

நான் தளபதிசமுத்திரத்தில் வசித்து வருகிறேன். நான் பெட்டி கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 04.06.2019ம் தேதி காலை 7.00 மணிக்கு காலை எனது வீட்டில் இருந்தபோது அங்கு வந்த எதிரி ஐயப்பன் எனது பேத்தி முத்துஅபிராமியை ஏன் ஹாஸ்டலில் சேர்த்தாய் என்று ஏசி கொண்டே எனது பேத்தியை உனது புருஷனுக்கு பிறந்ததா என்று என்னை ஆபாசமாக பேசி அருவாமுனையால் என்னை அறுக்க வந்து கையால் என்னை சுவற்றில் தள்ளினார். பின்னர் நான் வெளியே ஓடிவந்துவிட்டேன். பின்னர் நான்குநேரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். மருத்துவமனையிலிருந்து ஏர்வாடி காவல்துறையினருக்கு தகவல் கொடுத்தார்கள். பின்னர் காவல்துறையினர் நான்குநேரி அரசு மருத்துவமனைக்கு வந்து என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கி கொண்டனர். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் எனது கையெழுத்து உள்ளது. புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1. என்னை ஆபாசமாக பேசி, அடித்த எதிரி ஐயப்பன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார். காவல்துறையினர் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்த இடத்திற்கும், காவல்நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 5 கி.மீ தூரம் இருக்கும். சம்பவம் நடந்தவுடன் காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னேனா அல்லது போனேனா என்றால் நேரில் தான் போனேன். காவல்நிலையத்திற்கு

போனவுடன் புகார் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்தவுடன் சம்பவம் நடந்த பின்னர் எவ்வளவு நேரம் கழித்து மருத்துவமனைக்கு போனேன் என்றால் 7.00 மணிக்கு போய்விட்டேன். மருத்துவமனைக்கு எந்த வண்டியில் போனேன் என்றால் ஆட்டோவில் போனேன். சம்பவம் நடந்தபோது பக்கத்து வீட்டார்கள் வந்தார்களா என்றால் யாரும் வரவில்லை. சம்பவத்தை யாரும் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்து நான் வெளியே வரும்போது எத்தனை பேர் பார்த்தார்கள் என்றால் மூன்று பேர் பார்த்தார்கள். சம்பவ இடத்திலிருந்து போலிசார் பொருட்கள் எதுவும் கைப்பற்றினார்களா என்றால் எதுவும் கைப்பற்றவில்லை. எதிரி என்னை அரிவாள்முனையால் அறுக்க வந்தார் என்றும், சுவற்றில் தள்ளிவிட்டார் என்றும் புகாரில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் ஸ்டேசனில் வைத்து கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் மருத்துவமனையில் வைத்து தான் போட்டேன். போலிசார் என்னை விசாரணை செய்யும்போது இரண்டு கையெழுத்துக்கள் போட்டு கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரி என்னுடைய வீட்டில் இருப்பது எனக்கு பிடிக்காது என்று சொன்னால் சரிதான். எதிரி, எதிரியின் தாயார் என்னுடைய வீட்டை விட்டு போனால் தான் எனக்கு நிம்மதி என்றால் சரிதான். என்னுடைய வீட்டில் எதிரி உட்பட அனைவரும் ஒரே குடும்பமாக தான் வாழ்ந்து வருகிறோம் என்றால் சரிதான். எதிரிக்கு வேறு வீடு கிடையாது என்றால் சரிதான். எதிரிக்கு ஒரு ஆண்குழந்தையும், பெண்குழந்தையும் உண்டு என்றால் சரிதான். எதிரியை அடிக்கடி வீட்டை விட்டு வெளியே போக சொல்லியிருக்கிறேன் என்று சொன்னால் என்னை அடிக்கும்போது நான் சொல்லியிருக்கிறேன். எதிரியின் மகளை எதிரியின் அனுமதி இல்லாமல் நான் ஹாஸ்டலில் சேர்த்துவிட்டேன் என்று சொன்னால் சரிதான். எதிரி என்னிடம் எப்படி என் மகளை என்னிடம் கேட்காமல் எப்படி நீ ஹாஸ்டலில் சேர்க்கலாம் என்று கேட்டதற்கு நான் மிளகாய் பொடியை தூவி அடித்தேன் என்றால் சரிதான். எதிரியை நான் மிளகாய் பொடியை தூவி அடித்ததை அவர் வெளியே சொன்னால் எனக்கு தவறான பெயர் வந்துவிடும் என்பதால் நான் வெளியே வந்து எதிரி என்னை அடித்ததாக பொய்யாக சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகாரில் தேடி குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் பின் யோசனை செய்து தேதி குறிப்பிடாமல் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். சம்பவ இடத்தை சுற்றி யாருக்கு பாத்தியப்பட்ட இடம் என்று சொன்னால் தெற்கே படையாச்சியின் வீடும், வடக்கே பிரேமா என்பவரது வீடும் உள்ளது. எதிரியின் மனைவி இறந்து எத்தனை வருடம் இருக்கும் என்றால் 11 மாதம் இருக்கும். எதிரி என்னை அடிக்கவோ, ஏசவோ இல்லை என்று சொன்னாலும் எதிரியை என்னுடைய வீட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்பதற்காக பொய்யாக புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.